

# 6 யாழோசை




பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில், தமிழ்மொழிக்கு ஆக்கம் தந்த பெரியார்கள் மிகச் சிலரே. அவருள் ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, மறைமலையடிகள் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். நாவலர் அவர்கள் சைவ சமயக் கல்விக்கும் சைவப்பண்பாட்டிற்கும் புத்துயிர் அளித்தார். தாமோதரம்பிள்ளை அவர்கள் சங்க நூல்களையும் பழைய இலக்கணங்களையும் துருவியாராய்ந்து அச்சு வாகனமேற்றித் தமிழனின் பண்டைப் பெருமைகளையும், சீரிய பண்பாடுகளையும் உலகோர் அறிய வைத்தார். மறைமலையடிகள் வடமொழியின்றித் தமிழ் தனித்தியங்காது எனும் வெற்றெண்ணத்தைத் தகர்த்தெறிந்து, அதற்கு பண்டைத் தூய்மையைத் தேடிக் கொடுத்தார். விபுலானந்த அடிகளாரும் வடநாட்டுப் பண்பாடு முதலியவற்றால் அழிந்தொழிந்துபோன தமிழிசையையும் தமிழிசைக் கருவிகளையும் தமது ஆராய்ச்சியின் திறனால், திரும்பவும் எடுத்துத் தமிழ் மக்களுக்கு அளித்துப் பெரும் புகழீட்டினார். தன்னலங் கருதாத இப்பெரியாரின் ஓயா உழைப்பினால், தமிழ்த் தாய் இன்று உலகினர் போற்றவும் தமிழ் மக்கள் சூழ்ந்து நின்று ஏற்றிப் புகழவும் அரியாசனத்தில் வீற்றிருக்கின்றாள்.



அடிகளார் சங்க நூல்களைக் கற்றுத் தெளிந்த பேரறிஞர்; தமிழிலக்கணங்களை ஆராய்ந்தறிந்த பேரறிஞர்; உரைநடை எழுதுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்; சிறந்த கவி புனையும் பேராற்றல் மிக்கவர்; அன்றியும் தாம் ஆங்கில மொழி மூலம் கற்றறிந்த பூதநூல், வேதிநூல் முதலியவற்றின் நுண்பொருள்களைக் கற்றோரும் மற்றோரும் எளிதில் அறியக் கூடிய வண்ணம் தூய தமிழில் எடுத்து விளக்குவதில் வல்லுநர்; பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களையும் இலக்கியங்களையும் தமிழ் மொழியிற் பெயர்த்துத் தமிழுக்கு ஆக்கம் தேடித்தந்த பெரும் பேரறிஞர். இத்தகைய பேரறிஞர் தமிழ் மொழிக்கு தாமே தொண்டு செய்வதோடு அமையாது வேறு பல அறிஞரையும் ஊக்குவிக்கும்


பெருங்குணம் படைத்தவர். புத்தம் புதிய நூல்கள் பல தமிழ்மொழியில் எழுதல் வேண்டும் என்பதே அடிகளாரின் வேணவா. அதற்காகத் தம்மாலியன்றவற்றை எல்லாம் செய்து வந்தார். நன் மாணாக்கர் பலரை நாடெங்கும் உருவாக்கினார். தாம் முயலும் துறைகளிற் பணியாற்றும் புலவர்களுக்கும் நூலாசிரியர்களுக்கும் ஊக்கமளித்தார்.

சுருங்கக் கூறின், தமிழ்மொழி மேலோங்க வேண்டுமென்று தம்முளத்திற் கிடந்த பேருணர்ச்சியைத் தம் சுற்றாடலில் வந்தடைந்த எவருக்கும் அள்ளியிறைத்தார். அடிகளாரின் உணர்ச்சி வேகம் வந்தடைந்த எவரையும் அவர்பால் இழுத்தது. தமிழ்த் தொண்டில் ஈடுபடச் செய்தது. அடிகளார் தம் வாழ்க்கையில் முன்னேற்றமான கொள்கையுடனே வாழ்ந்தார். சமயத் துறையிற் பழைய வேதாந்தத்தைக் கடைப் பிடித்தவர் அல்லர். காலத்துக்கேற்றவாறு சமய ஆசாரங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் என்னும் எண்ணக் கருத்துடையவர். தமிழ் மொழியைப் பொறுத்தவரையிலும் மிகுந்த முன்னேற்றமான குறிக்கோளையுடையவர். அடிகளார் 1931 ஆம் ஆண்டு ஆனி மாதம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்குப் பேராசிரியராகப் போய் இருந்த பொழுது அவர் ஆற்றிய அரும்பணி ஒன்றினை நாம் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கின்றது.



சுப்பிரமணிய பாரதியார் எழுதிய பாட்டுக்கள் யாவும் மிகுந்த உணர்ச்சியுடன் முன்னேற்றமான கருத்துக்கள் பொதிந்துள்ளனவாய் இருந்தாலும் இலக்கண இலக்கியங்களைக் கற்றறிந்த பண்டிதர்கள் அவை பழைய யாப்பமைதியோடும் தமிழ் மரபோடும் முற்றப் பொருந்தாமையின் உண்மையான தமிழ்க் கவிதைகளல்ல என வெறுத்தனர். அப்பாடல்களுக்குரிய மேலான சிறப்பையும் கொடுக்க மறுத்தனர். ஆனால், அடிகளார் அண்ணாமலைநகர் அடைந்தபோது அங்கு பாரதி கழகம் என்ற ஒரு சங்கமும் கூட்டி அப்பாட்டுக்களை இசையறிந்த புலவரைக்கொண்டு இசையுடன் பாடுவித்தார். அதன் பின்னரே பாரதியார் புகழும் பாட்டுக்களும் தமிழ் நாடெங்கணும் பரவின. தேடாதிருந்த பாரதியாரைத் தமிழுலகம் கனம் பண்ண வைத்த பெருமை விபுலானந்த அடிகளுக்கே உரியதாகும்.

அன்றியும் பாரதியார் தமது பாடல்களில் விளம்பியவாறு பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் என்ற ஆசை பெரிதும் அடிகளுக்கு இருந்தது. அதனால், ஆங்கிலம் கல்லாது தமிழ் மட்டுமே கற்றோர்க்கு விஞ்ஞானக் கல்வியைத் தமிழில் மொழிபெயர்த்துச் சிறுசிறு நூல் வடிவமாகவோ கட்டுரை வாயிலாகவோ கொடுத்தல் வேண்டுமென விஞ்ஞானம் படித்த அறிஞரைக்



கேட்டுக் கொள்வார். ஆனால் விஞ்ஞானம் படித்த பெரும் புலவருக்கோ தமிழ் வராது. அதனால் அவர் படித்த படிப்பெல்லாம் தமிழ் மட்டுமறிந்த பொது மக்களுக்குச் சிறிதும் பயன்படாதிருந்தது. அந்த நிலை இந்த நாளிலும்கூட மாறவில்லை. அடிகளார் இதனைப் பற்றிப் பேசும்பொழுது யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையில் அமெரிக்க மிஷனரிமார் வைத்து நடத்திய செமினரியை எடுத்துக் காட்டாகப் பலமுறையும் கூறுவார். அச்செமினரியிற் படித்து வேலை செய்த பெரியார்கள் கணித நூல், வேதி நூல், பூதநூல், மருத்துவ நூல், உடல்நூல் முதலிய மேனாட்டு விஞ்ஞான நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டனர். அவ்வேலையை இடையிலே கைவிடாது யாழ்ப்பாணத்தவர் தொடர்ந்து ஆற்றியிருந்தால், தமிழ்மொழி மிக விரைவாக முன்னேறியிருக்கும். ஒரு பெரிய தொண்டை யாழ்ப்பாணம் இத்துறையில் ஆற்றியிருக்கும்.

*அடிகளாரும் ஏனையோரைப் போலவே ஆங்கிலம் மூலம் விஞ்ஞானம், கணிதம் முதலியவற்றைப் படித்துப் பட்டம் பெற்றவர். அதனாலே தாம் அறிந்த விஞ்ஞான அறிவைத் தமிழ்ப் பொதுமக்களுக்கு அளித்தல் வேண்டும் என்னும் பெருவிருப்புக் கொண்டவர். வேதி நூலைப் பற்றியோ பூத நூலைப் பற்றியோ நூல்கள் வரைந்து கொள்ள அவருக்கு நேரமில்லாது போயிற்று. ஆனால், தம் விஞ்ஞான அறிவை வேறு வகையாகத் தமிழ் மக்களுக்கு அளித்தார்.*

*1934 ஆம் ஆண்டிலே சென்னை மாகாணத்திலுள்ள அறிஞர்கள் ஒன்றுகூடி மேலைநாட்டு விஞ்ஞான நூல் முதலியவற்றைத் தமிழில் ஆக்குவதற்காகச் சொல்லாக்கக் கழகம் ஒன்றைச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்திற் கூட்டினர். அம்மாநாட்டிற்குப் பொதுத் தலைவராக அடிகளாரையே தேர்ந்தெடுத்தனர். இம்மாநாட்டின் பயனாக எழுந்ததே சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட கலைச்சொற்கள் என்னும் அகராதி நூலாகும். இந்நூலிற் காணப்படும் கலைச்சொற்களைக் கையாண்டே அறிஞர்கள் இப்போது தமிழ்நாட்டில் வேதிநூல், கணிதம், அரசியல்நூல் முதலியவற்றை எழுதுகின்றனர். இவ்வாறு அடிகளார் தொடங்கி வைத்த நன் முயற்சியால் விஞ்ஞானக் கலை இன்று தமிழில் விரைவாக வளர்ந்து வருகின்றது. தமிழ்நாட்டிலே எத்தனையோ பெரும் மேதாவிகள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். தாம் பிறந்த நாட்டிற்கும் மொழிக்கும் தம்மால் இயன்றவாறு அரும் பெரும் தொண்டுகளைச் செய்திருக்கின்றனர். தமிழ்மொழி மூலமாக உலகுக்குத் தொண்டு செய்த பெரியார்களுள் வள்ளுவர், இளங்கோ, சைவநாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள், மெய்கண்ட தேவர் அருணந்திசிவாசாரியார் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். இப்பெரியார் யாவரும் தமது அரிய எண்ணக் கருத்துக்களைத் தமிழ்மொழி மூலம் உலகிற்கு அளித்தனர். ஆனால் இவர்களைப் போன்ற உயர்ந்த எத்தனையோ பல தமிழர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்தனர். அவர்களுள் ஆதிசங்கரா சாரியார், இராமானுசர் முதலியோர் முதன்மை வாய்ந்தவர். அவர்கள் யாவரும் தமிழர். தமிழையே பேசினார்கள். எனினும் உயர்ந்த கருத்துக்கள் பொருந்திய நூல்களைத் தமிழில் எழுதாது வடமொழியில் எழுதி வைத்தனர். அதனால் வடமொழி*

சிறப்படைந்தது. ஆனால் அந்நூல்கள் தமிழில் எழுதப்பட்டிருந்தால் தமிழ்மொழி எத்துணைச் சிறப்படைந்திருக்கும்!

அடிகளார் தாம் கற்றறிந்த விஞ்ஞானப் பெரும் புலமையைக் கொண்டும் கணித அறிவைக் கொண்டும் பெரும் பெரும் ஆராய்ச்சிகளைச் செய்து ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கலாம். ஆனால் அவருக்குத் தமிழ்மேல் இருந்த அன்பு வேறெங்கோ இழுத்தது. தமிழ்மொழியிலும் தமிழ்ப் பண்பாட்டிலும் அவர் தமது கருத்தைச் செலுத்தினார். சிலப்பதிகாரத்திலேயுள்ள அரங்கேற்று காதையையே ஆராய்ந்தார். அதற்குள்ள அரும்பத உரையையும் அடியார்க்கு நல்லார் உரையையும் கற்றார். பண்டைத்தமிழர் மீட்டிய யாழிலே அவர் கவனம் சென்றது. மாதவியும் கோவலனும் கடற்கரைக் கானலில் இருந்து மாறிமாறி மீட்டிய யாழிசை அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. திரும்பவும் அவ்வின்னிசையைத் தம் காதாற் பருக ஆசை கொண்டார். இவ்வாசை பல ஆண்டுகளாக அவரை உறுத்தியது. முற்றாகத் துறந்த துறவி என்றாலும் தமிழ் மேல் வைத்த ஆசை அவரை விட்டிலது.

அவர் தமக்கிருந்த பூதநூல் அறிவையும் கணிதநூல் அறிவையும் பயன்படுத்திப் பண்டை யாழைத் திரும்பவும் அமைத்தார். இவ் யாழ் தமிழ்நாட்டிலே தோன்றி வளர்ந்த வரலாற்றை அவர் தமது யாழ்நூலில் கீழ் வருமாறு எழுதியிருக்கிறார்.

சரித்திர கால எல்லைக்கெட்டாத காலத்திலே, வில்யாழெனப் பெயரிய குழவியாயுதித்து, மழலைச் சொற்பேசி, இடையர் இடைச்சியரை மகிழ்வித்து, சீறியாழ் என்னும் பேதைப் பருவச் சிறுமியாகி, பாணனோடும் பாடினியோடும் நாடெங்கும் திரிந்து, ஏழைகளும் இதயம் களிப்பெய்த இன்சொற் கூறி, பின்பு பேரியாழ் என்னும் பெயரோடு பெதும்பைப் பருவமெய்தி, பெரும்பாணரோடு சென்று, குறுநில மன்னரும் முடிமன்னரும் தமிழ்ப் புலவரும் கொடை வள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட உரை பகர்ந்து, அதன்பின் மங்கைப் பருவமெய்தி, அப்பருவத்திற்கேற்பப் புதிய ஆடையும் அணிகலன்களும் பூண்டு நாடக அரங்கத்திலே திறமைகாட்டி மடந்தைப் பருவம் எய்தலும், திருநீலகண்டப் பெரும்பாணரோடும் மதங்கசூளாமணியாரோடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம் வந்து தெய்வ இசையினாலே அன்பருள்ளத்தினை உருக்கி முத்தமிழ் வித்தகராற் பாராட்டப்பட்டு அரிவைப்பருவம் வந்து எய்துதலும் அரசிளங்குமரிகளுக்கு இன்னுயிர்ப் பாங்காகி அவர்க்கேற்ற தலைவரை அவர்பாற் சேர்த்துச் சீரும் சிறப்பும் எய்தி இன்று யாழ் என்னும் மொழி நங்கை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயினாள்.

மறைந்து போன இந்த யாழும் அடிகளாரின் தன் முயற்சியினால் உயிர்பெற்றுப் பொலிவுடன் திகழுகின்றது.

**பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை**

**பயிற்சி**

1. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்ப்பணி ஆற்றிய இருவரைக் குறிப்பிடுக.
2. விபுலானந்த அடிகளாரின் தமிழ்ப் பணியினை விளக்குக.
3. அடிகளாரின் சமயப் பணியினை விளக்குக.
4. யாழோசை என்ற இக்கட்டுரைத் தலைப்பு இக்கட்டுரைக்குப் பொருந்தும் விதத்தினைப் பரிசீலிக்குக.

# அடை மொழிகள்

ஒரு பெயரை அல்லது வினையை விசேடிக்க அல்லது மேலும் விளக்குவதற்காக பயன்படுத்தப்படும் சொற்கள் அடைமொழிகள் எனப்படுகின்றன. இவற்றை இரண்டாக வகைப்படுத்தலாம்.

(அ). பெயரடை
(ஆ) வினையடை

## (அ) பெயரடை

**நல்ல புத்தகம், சிறிய புத்தகம், வெள்ளை முயல்**

இவற்றில் புத்தகம், முயல் என்ற பெயர்ச்சொற்களை நல்ல, சிறிய, வெள்ளை போன்ற சொற்கள் விசேடிக்கின்றன.

எப்படிப்பட்ட புத்தகம், எப்படிப்பட்ட முயல் என வினவும்போதும் பெயர் அடைமொழி பிறக்கும்.

எனவே பெயர்ச்சொற்களை விசேடித்து வரும் அடை பெயரடை மொழி எனப்படும்.

மேலும் சில உதாரணங்கள்

★ பெரிய மரம்
★ மிகப் பெரிய மரம்
★ மிக மிகச் சிறிய சட்டை

பெயரடையை அதன் அமைப்பு அடிப்படையில் இரண்டாக நோக்கலாம்.

1. தனிப் பெயரடை
2. ஆக்கப் பெயரடை / கூட்டுப் பெயரடை

### 1. தனிப் பெயரடை

புதிய வீடு, சிறிய கல், நெடிய மரம் என்ற பெயர்ச் சொற்களை புதிய, சிறிய, நெடிய போன்ற தனிச் சொற்கள் பெயரடையாக வந்துள்ளன. எனவே பெயர்ச் சொற்களை விசேடித்து வரும் தனிச்சொல் பெயரடையாக வந்தால் தனிப் பெயரடை எனலாம்.

மேலும் சில உதாரணங்கள்

- ★ சிவந்த பூ
- ★ நல்ல வீணை
- ★ குறுகிய சிந்தனை

### 2. ஆக்கப் பெயரடை / கூட்டுப் பெயரடை

கருணையுள்ள உள்ளம், இனிமையான பாடல்

இவற்றில் உள்ளம், பாடல் என்ற பெயர்ச் சொற்களை கருணையுள்ள, இனிமையான போன்ற தனிச் சொற்கள் பெயரடையாக வந்துள்ளன.

கருணை + உள்ள, இனிமை + ஆன எனப் பெயரடிகள் பிரிக்கக் கூடியதாய் உள்ளன. இதனால், இவை ஆக்கப் பெயரடை /கூட்டுப் பெயரடை எனலாம்.

எனவே பெயர்ச் சொற்களை விசேடித்து விளக்கி வரும் கூட்டுச் சொல் பெயரடையாக வந்தால் அதனை ஆக்கப் பெயரடை / கூட்டுப்பெயரடை எனலாம்.

உதாரணம்:-
- ★ அழகான பெண்
- ★ விசாலமான கட்டடம்
- ★ கருணையுள்ள உள்ளம்
- ★ பண்புள்ள மாணவன்
- ★ வேகமான குதிரை

## ஆ. வினையடை

**நேற்று வந்தான், மெல்லச் சிரித்தான்**

இவற்றில் வந்தான், சிரித்தான் என்ற வினைச் சொற்களை நேற்று, மெல்ல போன்ற சொற்கள் விசேடிக்கின்றன. எப்போது வந்தான், எப்படி சிரித்தான் என வினவும்போதும் வினையடைமொழி பிறக்கும்.

எனவே வினைச் சொற்களை விசேடித்து வரும் அடை, வினையடை எனப்படும்.

**எனவே வினைச் சொற்களை விசேடித்து வரும் கூட்டுச் சொல் வினையடையாக வந்தால் ஆக்க வினையடை கூட்டு வினையடை எனலாம்.**
வினையையடையை அதன் அமைப்பு அடிப்படையில் இரண்டாக நோக்கலாம்.

1) தனி வினையடை
2) ஆக்க வினையடை / கூட்டு வினையடை

### 1) தனி வினையடை

நாளை போவான்
இன்றும் வருவாள்

இவற்றில் போவான், வருவாள் என்ற வினைச் சொற்களை நாளை, இன்றும் போன்ற தனிச் சொற்கள் பெயரடையாக வந்துள்ளன.

எனவே, வினைச் சொற்களை விசேடித்து விளக்கி வரும் தனிச்சொல் வினையடையாக வந்தால் அதனை தனி வினையடை எனலாம்.

மேலும் சில உதாரணங்கள்

- ★ முன்பு சொன்னேன்
- ★ மெல்ல வா
- ★ இன்று செல்வாள்

### 2) ஆக்க வினையடை / கூட்டு வினையடை

வேகமாக ஓடினான்
இனிமையாகப் பாடினான்

இவற்றில் ஓடினான், பாடினான் ஆகிய வினைச் சொற்கள் வேகமாக, இனிமையாய் போன்ற சொற்களை வினையடைகளாக ஏற்று வந்துள்ளன.

வேகம் + ஆக, இனிமை + ஆய் என வினையடைகள் பிரிக்கக் கூடியதாய் உள்ளன. இதனால், இவை ஆக்க வினையடை / கூட்டு வினையடை எனப்படுகின்றன.
மேலும் சில உதாரணங்கள்

★ இனிமையாகப் பேசினான்
★ நிதானமாய்க் கூறினான்
★ ஏராளமாக வைத்திருக்கிறார்கள்

குறிப்பு - அடைமொழிகள் பண்பு, உணர்வு, நிலை, நிறங்களை உணர்த்தி வரும் செயல்களைக் காட்டாது.

**பயிற்சி**

1. பின்வரும் அடைமொழிகளை பெயரடை மொழிகள், வினையடை மொழிகள் எனப் பாகுபடுத்திக் காட்டுக.

   அழகிய, சின்னஞ் சிறிய, வேகமான, வேகமாக, இனிப்பான, தினமும், இனியும், பழைய, திறமையாக, காலையில்

2. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெற்ற பெயரடை, வினையடை என்பவற்றை இனங்கண்டு அவற்றை தனிப் பெயரடை, ஆக்கப் பெயரடை, தனிவினையடை, ஆக்க வினையடை எனப் பாகுபடுத்திக் காட்டுக.

   அ. நேற்று வந்தான் கண்ணன்.
   ஆ. பழுத்த பழம் மரத்திலிருந்து வீழ்ந்தது.
   இ. சிவந்த கண்களுடன் சேரன் போரிட்டான்.
   ஈ. பாரதி எளிமையான சந்தங்களைக் கையாண்டான்.
   உ. நளன் வேகமாகக் குதிரைகளைப் பூட்டு என்றான்.
   ஊ. வட்டம் வட்டமாக வரைந்தான்.
   எ. கசப்பான உண்மைகளை அவர் உரைத்தார்.

# உரையாடல்

உரையாடுவது மனித இயல்பு. ஏதாவது விடயங்கள் பற்றி இருவரிடையே அல்லது பலரிடையே இடம்பெறும் கருத்துப் பரிமாற்றமே உரையாடலாகும்.

இது உணர்வுபூர்வமாக, யதார்த்தமானதாக, கருத்துச் செறிந்ததாக பேச்சோசை மிக்கதாக அமைவதுண்டு.

### உரையாடலில் ஈடுபடுவதன் மூலம் கீழ்வரும் பயன்களை அடைய முடியும்.

1. கருத்துகளை ஒழுங்குறக்கூறும் திறனைப் பெறுதல்
2. கருத்துகளுக்கான சான்றுகளை, ஆதாரங்களை முன்வைக்கும் ஆற்றல்
3. விவாதத் திறனைப் பெறுதல்
4. மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் மனப்பாங்கு
5. அறிவுப் பெருக்கம்

### உரையாடல் ஒன்றினை எழுதும்போது கவனிக்க வேண்டியவை

1. தலைப்புக்குப் பொருத்தமான சாதக பாதகமான கருத்துக்களை, தகவல்களைத் திரட்டுதல்.
2. இரு பாத்திரங்கள் பேசுவது போன்ற பாணியில் எழுதுதல்.
3. நியமத் தமிழை பெரும்பாலும் பயன்படுத்துதல்.
4. தேவை ஏற்படின் பேச்சுத் தமிழை உபயோகித்தல்.
5. காரண, காரிய தொடர்புடன் கருத்துக்களை நிறுவுதல்.
6. படிமுறை ஒழுங்கில் எழுதுதல்.
7. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுதல்.
8. கவர்ச்சியாக எழுதுதல்.
9. கருத்துக்களை உறுதியாக முன்வைத்தல்.
10. பொருத்தமாக முடித்தல்.

உரையாடும் திறன் மாணவர்களின் சிந்தனை, பேச்சுத்திறன், எழுத்துத் திறன், தர்க்கிக்கும் மனப்பாங்கு என்பவற்றை வெளிக்காட்டும் தன்மையுடையது. எனவே காத்திரமான உரையாடல்களை எழுதிப் பழகுவோம்.

**பயிற்சி**

1. செல்லிடத் தொலைப்பேசி பாவனை இன்றைய மனித வாழ்வை மேம்பாடடையச் செய்துள்ளது எனக் கூறும் ஒருவருக்கும், அதை மறுத்து செல்லிடத் தெலை பேசிப் பாவனையால் மனித வாழ்வு பல இடையூறுகளையே சந்திக்கிறது என்று கூறும் இன்னொருவருக்கும் இடையிலான உரையாடல் ஒன்றை எழுதுக.

4. இன்றைய சமூக வலைத்தளங்களினால் இளைஞர்கள் மத்தியில் பரவி வருகின்ற பல்வேறு தீமைகளைக் கட்டுப்படுத்திக் குறைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இருவருக்கான உரையாடலை எழுதிக்காட்டுக.

# தொடரியல்

## தொகை நிலைத் தொடர்களும் தொகா நிலைத் தொடர்களும்

| அ | ஆ |
|---|---|
| மரம் | எறிகணை |
| மனிதன் | கயல்விழி |
| தேவன் | மற்றொன்று |
| கடல் | கடற்கரை |
| ஆகாயம் | கண்ணா வா |

மேலே தரப்பட்டுள்ள **அ** தொகுதியையும் **ஆ** தொகுதியையும் நன்கு அவதானித்து, அவற்றிற்கு இடையே காணப்படும் வேறுபாட்டினை இனங்காண்போம். **அ** தொகுதியிலுள்ளவை ஒவ்வொன்றும் தனிச்சொல்லாக நின்று பொருளை உணர்த்துவதையும் **ஆ** தொகுதியில் உள்ளவை ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து பொருள் உணர்த்துவதையும் அறிகின்றோம். எனவே, ஒரு சொல்லை இன்னொரு சொல் தொடர்ந்து வந்து ஒரு பொருளை உணர்த்துவது தொடர் எனப்படும்.

### தொடர்

தொகை என்பது தொக்கி (மறைந்து) நிற்றலாகும். தொக்கி என்பதன் அடியாகவே தொகை பிறந்தது. இதனால் தொகை என்பது 'மறைந்து' எனப் பொருள்படும். அதாவது, ஒரு சொல்லை மற்றொரு சொல் தொடர்ந்து வரும்போது வேற்றுமை முதலான உருபுகள் அத்தொடருக்குள்ளே மறைந்து வருதல் தொகை நிலைத் தொடர் எனப்படும். அதாவது மறையாமல் வெளிப்படையாக வந்து தனித்தனியாக நின்று பொருள் வழங்குவதாயும் வேற்றுமை முதலான உருபுகள் வெளிப்படையாகத் தோன்றி வருவதும் தொகா நிலைத் தொடர் எனப்படும்.

**தொகை நிலைத் தொடர்**

1. வேற்றுமைத் தொகை
2. வினைத் தொகை
3. பண்புத் தொகை
4. உவமைத் தொகை
5. உம்மைத் தொகை
6. அன்மொழித்தொகை

**தொகா நிலைத்தொடர்**

1. எழுவாய்த் தொடர்
2. விளித்தொடர்
3. வேற்றுமைத் தொடர்
4. வினைமுற்றுத்தொடர்
5. பெயரெச்சத்தொடர்
6. வினையெச்சத்தொடர்
7. இடைச்சொற்றொடர்
8. உரிச்சொற்றொடர்
9. அடுக்குத்தொடர்

## தொகைநிலைத்தொடர்கள்

| அ | ஆ |
|---|---|
| மீனை விற்கும் சந்தை | மீன்சந்தை |
| வட்டமான மேசை | வட்டமேசை |
| கயல் போன்ற விழி | கயல்விழி |

மேலே தரப்பட்டுள்ள முதலாம் தொகுதிக்கும் இரண்டாம் தொகுதிக்கும் இடையில் காணப்படும் வேறுபாட்டினை நோக்குவோம்

**அ** தொகுதியில் காணப்படும் ஐ, ஆன, போன்ற உருபுகள் **ஆ** தொகுதியில் மறைந்து வந்துள்ளதை அவதானிக்கலாம்.

வேற்றுமை உருபு. பண்புருபு முதலிய இடைச்சொற்களோ ஏனைய உருபுச் சொற்களோ மறைந்து வரும் தொடர் தொகை நிலைத் தொடர் எனப்படும்.

தொகைநிலைத் தொடர்களின் பண்புகள்:

1. உருபுகள் மறைந்து வருதல் வேண்டும்.
2. ஒரு சொல் போன்று இயங்குதல் வேண்டும்.

## தொகைநிலைத் தொடர்கள் வருமாறு

### 1. வேற்றுமைத் தொகை

| வேற்றுமைத் தொகை | வேற்றுமை விரி | உருபு | வகை |
|---|---|---|---|
| மீன் சந்தை | **மீனை** விற்கும் சந்தை | **ஐ** | 2ம் வேற்றுமை |
| தங்கக்காப்பு | **தங்கத்தால்** செய்யப்பட்ட காப்பு | **ஆல்** | 3ம் வேற்றுமை |
| முதியோர் இல்லம் | முதியோ**ருக்கு** உரிய இல்லம் | **கு** | 4ம் வேற்றுமை |
| கண்ணீர் | கண்ணிலி**ருந்து** வரும் நீர் | **இல்** | 5ம் வேற்றுமை |
| குளக்கரை | குளத்தி**னது** கரை | **அது** | 6ம் வேற்றுமை |
| கிணற்றுத்தவளை | கிணற்றி**னுள்** வாழும் தவளை | **உள்** | 7ம் வேற்றுமை |

வேற்றுமை உருபுகள் தொக்கி வரும் தொடர்கள் வேற்றுமைத் தொகை எனப்படும்.

### 2. வினைத்தொகை

ஏவுகணை, பொழிகதிர், ஓடுமீன் முதலியவற்றை விரித்து எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| ஏவிய கணை | ஏவுகின்ற கணை | ஏவும் கணை |
| பொழிந்த கதிர் | பொழிகின்ற கதிர் | பொழியும் கதிர் |
| ஓடிய மீன் | ஓடுகின்ற மீன் | ஓடும் மீன் |

காலங்காட்டும் இடை நிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து நிற்க, வினையடியும் பெயர்ச்சொல்லும் இணைந்து உருவாகும் தொடர் வினைத் தொகை எனப்படும்.

### 3. பண்புத்தொகை

★ கருமையாகிய பலகை
★ வெண்மையான ஆடை
★ வட்டமான மேசை

முதலான தொடர்களில் இடம்பெறும் ஆகிய, ஆன என்னும் பண்புருபுகளை நீக்கி எழுதுவோம்.

★ கரும்பலகை
★ வெள்ளாடை
★ வட்டமேசை

இவ்விதம் பண்பு உருபுகள் மறைந்து நிற்கும் தொடர்கள் பண்புத் தொகை எனப்படும்

பண்பு உருபு மறைந்து நிற்க, சிறப்புப் பெயரோடு பொதுப் பெயர் இணைந்து வரும் தொடரினை இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர் .

கமுகு மரம், சுறா மீன், சாரைப்பாம்பு, கதலி வாழை

### 4. உவமைத்தொகை

| **உவமைத்தொகை** | **உவமைவிரி** |
|---|---|
| மதிமுகம் | மதி அன்ன முகம் |
| கிளிப்பேச்சு | கிளி போன்ற பேச்சு |
| கொடியிடை | கொடி போன்ற இடை |

உவமை உருபுகள் மறைந்து நிற்கும் தொடர்கள் உவமைத் தொகை எனப்படும்.

### 5. உம்மைத்தொகை

- ★ எண்ணும் எழுத்தும்
- ★ இரவும் பகலும்
- ★ அந்தமும் ஆதியும்

எனும் தொடர்களில் இடம்பெறும் **உம்** இடைச் சொல்லை நீக்கி அல்லது தவிர்த்து எழுதுவோம்.

எண்எழுத்து, இராப்பகல், அந்தாதி என அமையும். இவ்வாறு, **உம்** இடைச்சொல் மறைந்து நிற்கும் தொடர்கள் உம்மைத் தொகை எனப்படும்.

### 6. அன்மொழித்தொகை

பூங்குழல் வந்தாள் என்னும் தொடர் பூவினை அல்லது கூந்தலைக் குறிக்கவில்லை என்பதை நாம் அறிவோம். பூவினை அணிந்த பெண்ணையே குறிக்கின்றது. இது போன்ற மேலும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

- ★ கருங்குழல் சிரித்தாள்.
- ★ பாவை வந்தாள்.
- ★ பொன்பொருள் வந்தார்.

இத்தகைய தொடர்கள் வேற்றுமை முதலான ஐந்து தொகை நிலைத் தொடர்களைப் போல், தமக்குரிய பொருளை உணர்த்துகின்றன என்பதை அறிகின்றோம். இத்தகைய தொடர்களை அன்மொழித் தொகை என்பர் .

- பொற்றொடி சென்றாள் - பொன்னால் ஆன வளையலை அணிந்த பெண்
  வேற்றுமைத் தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.
- தாழ்குழல் வந்தாள் - தாழ்ந்த, தாழ்கின்ற தாழும் கூந்தலை உடைய பெண்
  வினைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.
- கார்குழல் வழக்குரைத்தாள் - கார்மேகம் போன்ற கூந்தலை உடைய பெண்
  உவமைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.
- கருவிழி அழுதாள் - கருமையான விழி உள்ள பெண்
  பண்புத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.
- உயிர் மெய்களை எழுது- உயிரும் மெய்யும் கலந்த உயிர்மெய் எழுத்து
  உம்மைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

தொகை நிலைத் தொடர்கள் வாக்கியத்தில் ஒரு தனிச்சொல்லைப் போன்றே தொழிற்படுகின்றன. தற்கால மொழியியலாளர்கள் தொகை நிலைத் தொடர்களை கூட்டுப் பெயராகக் கருதுகின்றனர் .

**பயிற்சி**

தரப்பட்டுள்ள தொடர்களை இனங்கண்டு வேறுபடுத்துக.

தேன்மொழி, தோட்டந்துறவு, குயிற்பேச்சு, இட்லிவடை, வெண்மேகம், சுடுகதிர், தேநிலவு, மணியோசை, நாடுநகர் , பொன்மலர் , வளர் மதி, இன்சொல், குரைகடல், இனிப்படை, உறைப்புக்கறி

## தொகா நிலைத் தொடர்கள்

பின்வரும் தொடர்களை நன்கு அவதானிப்போம்.

★ சூரியன் உதித்தது. ★ வஞ்சித்தாள் கண்ணகி.
★ புலம்பி அழுத தமயந்தி. ★ வில்லை வளைத்தான்.

இவைகள் தனிச்சொற்கள் போன்று இயங்கவுமில்லை; உருபுகள் மறைந்து நிற்கவுமில்லை; சொற்கள் தனித்தனியாக நின்று பொருள் தருகின்றன. இவ்வாறு, வேற்றுமை முதலானவற்றின் உருபுகள் மறைந்து நிற்காமலும் தனித்து ஒரு சொல் போல் இயங்குகின்ற தன்மை பெறாமலும் அமைகின்ற தொடர்களை தொகாநிலைத் தொடர்கள் என்பர்.

இனி, தொகா நிலைத் தொடர்களின் வகைகளையும் உதாரணங்களையும் நோக்குவோம்


| **தொகா நிலைத் தொடர்கள்** | **உதாரணங்கள்** |
|---|---|
| எழுவாய்த் தொடர் | பறவைகள் பறந்தன.<br>கமலா வந்தாள். |
| விளித்தொடர் | கண்ணா! வா.<br>மகனே! ஓடாதே. |
| வேற்றுமைத் தொடர் | வீட்டை இடித்தான்.<br>கோயிலுக்குச் சென்றான். |
| வினைமுற்றுத் தொடர் | ஓடினாள் சுதமதி.<br>பாடினான் பாலு. |
| பெயரெச்சத் தொடர் | சிரித்த பங்கயம்.<br>முறிந்த பனை. |
| வினையெச்சத் தொடர் | பார்த்து இரசித்தனர்.<br>ஆடி மகிழ்ந்தாள். |
| இடைச் சொற்றொடர் | இனிப் பொறுக்கமாட்டேன்.<br>இனி விடியும். |
| உரிச் சொற்கள் | கடி நகர்.<br>உறுதுணை. |
| அடுக்குத்தொடர் | அஞ்சலி அஞ்சலி,<br>நல்லது நல்லது |

**பயிற்சி**

பின்வரும் தொகா நிலைத்தொடர்களுக்கு ஐந்து உதாரணங்கள் வீதம் எழுதுக.

அ) எழுவாய்த் தொடர்
ஆ) விளித்தொடர்
இ) வேற்றுமைத் தொடர்
ஈ) வினைமுற்றுத் தொடர்
உ) பெயரெச்சத் தொடர்
ஊ) வினையெச்சத் தொடர்
ஏ) அடுக்குத்தொடர்

# பேரிகை



துன்பம் பிறர்க்கு; நல் இன்பம் தமக் கெனும்
துட்ட மனோபாவம்;
அன்பினை மாய்க்கும்; அறங்குறைக்கும்; புவி
ஆக்கந் தனைக் கெடுக்கும்
வன்புக்கெலாம் அதுவே துணையாய் விடும்
வறுமை யெலாம் சேர்க்கும்!
இன்பம் எல்லோர்க்கும் என்றே சொல்லிப் பேரிகை
எங்கும் முழக்கிடுவாய்

நல்லவர் நாட்டினை வல்லவர் தாழ்த்திடும்
நச்சு மனப் பான்மை;
தொல் புவி மேல் விழும் பேரிடியாம்; அது
தூய்மைதனைப் போக்கும்;
சொல்லிடும் நெஞ்சில் எரிமலை பூகம்பம்
சூழத் தகாது கண்டாய்!
செல்வங்கள் யார்க்கும் என்றே சொல்லிப் பேரிகை
திக்கில் முழக்கிடுவாய்!

***பாரதிதாசன்***
***பாரதிதாசன் கவிதைகள்-***

◆ *அரும்பதங்கள்*

| | | | |
|---|---|---|---|
| *துட்ட* | *- ஒழுங்கற்ற* | *மாய்க்கும்* | *- அழிக்கும், மறைக்கும்* |
| *குறைக்கும்* | *- வீழ்த்தும்* | *வன்பு* | *- பகை* |
| *பேரிகை* | *- முரசு* | *தமர்கள்* | *- உறவினர்கள்* |
| *தாரணி* | *- பூமி* | *பைம்புனல்* | *- பசிய, பசுமையான நீர்* |
| *சித்தம்* | *- உள்ளம்* | *செகம்* | *- உலகம்* |
| *நச்சு* | *- சிறுமைத்தனம்* | *சேமம்* | *- நன்மை* |

# பழமொழிகள்

★ அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

★ அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.

★ அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.

★ அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?

★ அடக்கமே பெண்ணுக்கு அழகு.

★ அடக்கம் உடையார் அறிஞர்; அடங்காதவர் கல்லார்.

★ அடாது செய்தவன் படாது படுவான்.

★ அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கில் அமுதமும்.

★ அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வாராது.

★ அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் ஆகான்.

★ அன்று எழுதிவன் அழித்து எழுதுவானா?

★ ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்க வேண்டும்.

★ ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணல்.

★ இக்கரைக்கு அக்கரை பச்சை.

★ இட்டுக் கெட்டார் எங்குமே இல்லை.

★ இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.

★ இரக்கப் போனாலும் சிறக்கப் போ.

★ கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா?

★ கனிந்த பழம் தானே விழும்.

★ கற்கையில் கல்வி கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு.